# T/ St.Mary's College. (National School)

## Trincomalee.

# Third Term Examination – November 2019

**Grade – 10** **Information Communication & Technology** **Time: 3 Hours**

*பகுதி 1*

***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

1. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?
   1) முதலாம் தலைமுறைக் கணினிகள் வெற்றிடக்குழாய்களை அடிப்படையாகக் கொண்டவையயாகும்.
   2) UNIVAC இரண்டாம் தலைமுறைக் கணினிகளாகும்.
   3) உலகின் முதலாவது கணினி செய்நிலராளர் Ada Lovelace ஆவார்.
   4) Joseph Jacquard துளை அட்டை முறையை அறிமுகப்படுத்தியவர் ஆவார்

2. கணினியின் மூளை ஆகக் கருதப்படுவதும் செயன்முறைப்படுத்தலுக்கான அறிவுறுத்தல்களுக்கு பொறுப்பு வகிப்பதுமான வன்பொருள் சாதனம் -

   1) RAM 2) ROM 3) Motherboard 4) CPU

3. 5 Bits கொண்ட இரும எண்ணின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய மிகப் பெரிய தசம எண் எது?

   1) 32 2) 64 3) 16 4) 8

4. எண்ம எண் *173*ஐ சேமிக்கத் தேவையான குறைந்த பட்ச பிட் (Bits) எண்ணிக்கை யாது?

   1) 12 2) 5 3) 9 4) 7

5. ஒரு எண் $101_y$ எனக் குறிப்பிடப்படுகின்றது. Y என்பது எண்ணின் அடியாகும். $101_y$ எனும் எண் பின்வருவனவற்றில் அந்த எண்முறையைச் சார்ந்ததாக இருக்கலாம்?
   1) பதினறும மற்றும் இரும எண்முறை
   2) எண்ம மற்றும் இரும எண்முறை
   3) எண்ம, இரும மற்றும் பதினறும எண்முறை
   4) எண்ம மற்றும் பதினறும எண்முறை

6. தரப்பட்ட தர்க்கச்சுற்றில் A =1, B = $\overline{A}$ ஆக அமையும் போது பின்வருவனவற்றுள் எது தவறாக அமையும் ?





   1) C = 0
   2) A = 1
   3) B = 0
   4) B = 1

7. தரவு மற்றும் தகவல்களைப் பற்றிய பின்வரும் எந்த அறிக்கை உண்மையாகும்?
   1) முறைவழியாக்கப்பட்ட தரவு எப்போதும் உண்மையாகும்
   2) தகவலின் துல்லியத்தன்மை உள்ளீடு செய்யும் தரவில் தங்கியுள்ளது.
   3) அதிகளவு தரவுகள் மூலமே தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்
   4) முறைவழியாக்கத்திற்கு உட்பட்ட தகவல்கள் எப்போதும் உண்மையாகும்

8. ஒரு சிற்றுண்டிச்சாலையில் மாணவர்களுக்கு S, T, U என மூன்று விதமான பழச்சாறுகள் உணவுடன் வழங்கப்படுகின்றன. மாணவர் ஒருவர் ஒரு உணவுடன் S எனும் பழச்சாறினை தெரிவு செய்தால் அன்று முழுவதும் அவர் மீண்டும் அப்பழச்சாறினை தெரிவு செய்ய முடியாது. கீழ்வருவனவற்றில் மாணவரின் பழச்சாற்றுத் தெரிவினை பிரதிபலிப்பது எது?

1) S OR (T OR U). 2) S AND (T AND U)
3) S AND (T OR U) 4) S OR (T AND U)

9. கீழேயுள்ள தர்க்கச்சுற்றின் பூலியன் கோவை யாது?




1) $[C + \overline{(A.B)}] . \overline{(A+B)}$
2) $[C . (\overline{A+B})] + \overline{(A.B)}$
3) $[C . (\overline{A}.\overline{B})] . (\overline{A+B})$
4) $[C + (\overline{A}.\overline{B})[ + \overline{(A.B)}$

10. பின்வரும் மென்பொருட்களைக் கருதுக.

A – DOS B - Windows xp C - Linux D – Explora

இவற்றில் பணிச்செயல்முறைமைகளை இனங்காண்க ?

1) A, B and C 2) A and D
3) A and B 4) A, B, C and D

11. பின்வருவனம் தொகுதிகளில் நல்ல தகவலின் பண்புகள் அனைத்தையும் கொண்டிராத தொகுதியினை இனங்காண்க?

1) பொருத்தம், எல்லா அம்சங்களும் இருத்தல், துல்லியமானது
2) எல்லா அம்சங்களும் இருத்தல், கணினியில் சேமிப்பு, துல்லியம்
3) காலத்திற்கு பொருத்தம், எல்லா அம்சங்களும் இருத்தல், திருத்தம்
4) குறைந்த கிரயம், திருத்தம், எல்லா அம்சங்களும் இருத்தல்

12. லஹிரு, திசுன், சஞ்சீவ மற்றும் கசுன் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் லஹிருவின் வயது $31_8$ , திசுனின் வயது $28_{16}$, சஞ்சீவவின் வயது $100011_2$ ,கசுனின் வயது 33. இவர்களில் மூத்தவர் ( வயது கூடியவர் ) யார்?

1) லஹிரு 2) திசுன் 3) சஞ்சீவ 4) கசுன்

13. விசைப்பலகையில் உள்ள Shift key, Alt key, F1 ஆகிய சாவிகள் எத்தொழிற்பாட்டு சாவி வகையீட்டினுள் அடங்குகின்றன?

1) control key / special key / function key 2) function key / control key / special key
3) special key / control key / function key 4) special key / control key / numeric key

14. கீழே உள்ள உண்மை அட்டவணைக்குரிய தர்க்கப்படலையினை தெரிந்தெடுக்குக:

| Input 1 | Input 2 | Output |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 1 | 1 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |

1) AND 2) OR
3) NOT 4) NAND

15. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் எழுத்துருவின் அளவினை அதிகரிக்க பயன்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?


1)   2)  3) 4) 

16. கீழே செவ்வக பெட்டியினுள் தரப்பட்டுள்ளதில் ‘th’ இல் மேற்கொள்ளப்பட்டுள்ள வடிவமைப்பு எது?

| |
|---|
| My birthday is $25^{th}$ of October 2002. |

1) Superscript  2) Subscript  3) Strikethrough  4) Hidden

**கீழேயுள்ள விளக்கப்படம் ஒரு விரிதாள் மென்பொருளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. இது 2012 முதல் 2014 வரை ஒரு குறிப்பிட்ட பாடத்தில் G.C.E (O / L) தேர்வில் தேர்ச்சி சதவீதத்தைக் காட்டுகிறது.**




17. விளக்கப்பட வரைபில் A என அழைக்கப்படுவது

1) Label  2) Title  3) Legend  4) Axis

18. வரைபில் 91.5, 96.2, 94.0 ஆகியன எப்பெயரால் இனங்காணப்படும்?

1) Series  2) Point  3) Data label  4) Grid

19. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளில் காணப்படாத வசதி பின்வருவனவற்றுள் எது?

1) ஆவணங்களினுள் அசைவூட்டங்களை உருவாக்கல்
2) ஆவணத்தில் படங்களை உட்புகுத்தல்
3) ஆவணத்தில் அட்டவணையை உட்புகுத்தல்
4) ஆவணங்களை சேமிக்கும் போது கடவுச்சொல்லினை வழங்கல்

20. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் ‘ctrl + A’ மற்றும் ‘ctrl l+ V’ குறுக்கு வழிச்சாவிகள் பயன்படுத்தப்படுவதன் நோக்கம் -

1) Open - go to ஆகியவற்றுக்கு  2) முழு ஆவணத்தினையும் தெரிதல் - Paste க்கு
3) Find – Help ஆகியவற்றுக்கு  4) Find – Replace ஆகியவற்றுக்கு

21. ~~Communication~~ எனும் விளைவைப் பெற பயன்படுத்தப்பட்டுள்ள பொருத்தமான எழுத்துரு வடிவமைப்பு எது?

1) Outline  2) Emboss  3) Double strike through  4) Strike through

22. பின்வரும் பந்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள உள்தள்ளல் எது?

Video provides a powerful way to help you prove your point. When you click Online Video, you can paste in the embed code for the video you want to add. You can also type a keyword to search online for the video that best fits your document.
To make your document look professionally produced, Word provides header, footer, cover page, and text box designs that com

1) Left Indentation - இடப்பக்கத்திலிருந்து உள்தள்ளுதல்
2) Right Indentation - வலப்பக்கத்திலிருந்து உள்தள்ளுதல்
3) First line indents - முதலாவது வரிசையினை உள்தள்ளுதல்
4) Hanging indent - முதல் வரி தவிர்த்து ஏனை வரிகளை உள்தள்ளுதல்

23. தரப்பட்டுள்ள ஆவணத்தின் பகுதியில் “What” என்ற சொல்லில் “W” என்ற சொல் வடிவமைக்கப்பட்டுள்ள விதம் எவ்வாறு அழைக்கப்படும்?

*W hat you don't feel,*
*you will not grasp by art,*
*Unless it wells out of your soul*
*And with sheer pleasure takes control,*
*Compelling every listener's heart.*
*But sit – and sit, and patch and knead,*

1) Font size
2) Column
3) Word Art
4) Drop Cap

- ***வினாக்கள் 24 முதல் 26 வரையானவைக்கு தரப்பட்டுள்ள விரிதாளினை அடிப்படையாக் கொண்டு விடையளிக்குக.***

C8

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1 | Name | Sub 1 | Sub 2 | |
| 2 | Dasun | 23 | 65 | |
| 3 | Anuk | 75 | 92 | |
| 4 | Tharu | ab | 86 | |
| 5 | Meena | 60 | 56 | |
| 6 | | | | |

24. கீழ்வருவனவற்றுள் Sub1 இற்கான சராசரியைக் காண்பதற்கான சூத்திரங்களில் தவறான வருவிளைவைத் தருவது எது?

1) =B2 +B3+B4+B5/3
2) =(B2+B3+B4+B5)/3
3) =SUM(B2:B5)/3
4) =AVERAGE(B2:B5)

25. கீழ்வரும் சார்புகளில் அதிகூடிய மற்றும் மிகக் குறைந்த பெறுமதியைக் காண்பதற்கு பயன்படுத்தப்படுபவை முறையே?

1) =MIN(C2:C5) and =MAX(C2:C5)
2) =Sum(C2:C5) and =AVG(C2:C5)
3) =Maximum(C2:C5) and =Minimum(C2:C5)
4) =Max(C2:C5) and =Count(C2:C5)

26. கலம் B6 இல் =COUNT(A1:C5) எனும் சூத்திரத்தினை வழங்கும் போது வெளியீடு யாதாக இருக்கும்?

1) 9
2) 7
3) 15
4) 14

27. இலத்திரனியல் விரிதாளில் தரவு வீச்சின் வலப்பக்க இறுதிக்கலத்திற்கு செல்வதற்கான சாவி / சாவிச் சேர்மானங்கள் எவை?

1) Alt + End  2) End  3) Ctrl + End  4) Shift + End

28. விரிதாள் கலமொன்றில் =2*3+5^2 எனும் சமன்பாடு உள்ளிடப்பட்டால் வருவிளைவு யாதாக இருக்கும்?

1) 16  2) 31  3) 20  4) 21

29. “விரிதாள்” மென்பொருட்களை இனங்காண்க?

A – Photoshop
B – Excel
C – Numbers
D – Openoffce Calc

1) A and B only  2) A,B and C only  3) B and C only  4) B,C and D only

30. விரிதாள் கலமொன்றில் தரவினை உள்ளிட்ட போது அது வலது நேர்படுத்தலுக்கு உள்ளானமையைக் காணக்கூடியதாக இருந்தது. அத்தரவு வகை பின்வருவனவற்றுள் :

1) Values ( பெறுமானம் )  2) Labels ( முகப்பு அடையாளம் )
3) Special characters ( விசேட எழுத்துக்கள்)  4) மேற்கூறிய எல்லாம்

31. நிகழ்த்துகை மென்பொருளின் அனுகூலங்கள் எவை?

A – காணொளிகளை படவில்லைகளில் உட்புகுத்தக் கூடிய வசதி காணப்படல்
B – ஒரு படவில்லையிலிருந்து இணையத்திற்கான மீயிணைப்புக்களை ஏற்படுத்தக் கூடிய வசதி காணப்படல்
C – நிகழ்த்துகைகளை அச்சிடக்கூடிய வசதி காணப்படல்

1) A and B only  2) B and C  3) A and C only  4) யாவும் சரி

32. எல்லாப் படவில்லைகளையும் ஒரே திரையில் நோக்குவதற்கான காட்சித் தத்தல் எது?

1) Normal View – சாதாரண பார்வை  2) Slide Sorter – வரிசைப்படுத்தல் பார்வை
3) Reading View – வாசிப்புப் பார்வை  4) Slide Show View – முழுமையான பார்வை

33.நிகழ்த்துகை ஒன்றில் புதிய படவில்லை ஒன்றைச் செருகுவதற்கான சாவிகளின் சேர்க்கை எது?

1) Ctrl + M  2) Ctrl+ N  3) Alt + M  4) Alt + N


34. நிகழ்த்துகை ஒன்றில் படவில்லைகள் வடிவமைக்கப்படுவதன் நோக்கம்,

A – நேர அளவினை குறைக்க
B – நிகழ்த்துகைக்குப் பொருத்தமான நிறங்களின் சேர்க்கையைப் பயன்படுத்த
C - Action buttons ஐ நிகழ்த்துகையில் உட்புகுத்த

இவற்றில் உண்மையான கூற்று எது?

1) Only A and B  2) Only B and C  3) Only A and C  4) Only A B and C

35. Microsoft Power point மென்பொருளில் கீழே உள்ள படவுரு குறிப்பிடுவது -



1) Slide Design
2) Slide Sorter
3) Slide Show
4) Normal Slide

கீழேயுள்ள தரவுத்தள அட்டவணையானது வெளிநோயாளர் பிரிவிலுள்ள ( OPD ) பதிவு செய்யப்பட்ட நோயாளிகள் (Patient), வைத்தியர்கள் ( Doctor ), நோயாளிகளை பார்வையிடுவதற்காக வைத்தியர்களுக்கான பதிவு ( Channel ) விபரங்களை உள்ளடக்கியதாகும்.

வினாக்கள் 36 – 40 இற்கு விடையளிப்பதற்கு இவவட்டவணைகளைப் பயன்படுத்தவும்.

**Patient Table**

| Patient_ID | P_Name | Address | Phone |
|---|---|---|---|
| P001 | Kasuni | Nugegoda | 0112547874 |
| P002 | Vishwa | Rajagiriya | 0115203647 |
| P003 | Thimali | Moratuwa | 0112114736 |
| P004 | Priya | Kottawa | 0114885562 |

**Doctor Table**

| Doctor_ID | Doctor_Name | Phone_No | Speciality |
|---|---|---|---|
| D001 | Fernando | 0117422547 | Arthritis |
| D002 | Amal | 0113669851 | Diabetes |
| D003 | Pathirana | 0112003585 | Cardiologist |
| D004 | Anuradha | 0114586230 | Dentist |

**Channel Table**

| Patient_ID | Doctor_ID | Add_Date | Is_Paid |
|---|---|---|---|
| P002 | D003 | 2019/08/23 | Yes |
| P001 | D001 | 2019/09/07 | Yes |
| P004 | D002 | 2019/08/25 | No |
| P002 | D002 | 2019/08/23 | Yes |
| P003 | D004 | 2019/09/20 | Yes |

36. Channel table இல் உள்ள பதிவுகளின் எண்ணிக்கை யாது?
   1) 4   2) 3   3) 5   4) 6

37. மேற்படி தரவுத்தளத்திலிருந்து அந்நியச்சாவிக்கு உதாரணமாக அமையும் அந்நியச்சாவியும் அது அமைந்திருக்கும் தரவுத்தளமும் முறையே -
   1) Patient_Id - Channel table   2) Doctor_Id - Doctor table
   3) Patient_Id - Patient Table   4) Phone_No - Doctor Table

38. Channel table இலுள்ள Is_paid புலத்திற்கு பொருத்தமான தரவு வகை எது?
   1) Text   2) Yes/No   3) Number   4) Memo

39. பின்வரும் வைத்தியர்களில் யார் நோயாளி Vishwa வை சேர்த்துள்ளனர்?
   1) Pathirana and Anuradhaa   2) Fernando and Amal
   3) Anuradha and Amal   4) Pathirana and Amal

40. நோயாளி Thimali பதிவு செய்த (channel) வைத்திய நிபுணரின் பெயர் யார்?
1) Cardiologist   2) Dentist   3) Arthritis   4) Diabetes

( 40 x 1 = 40 புள்ளிகள் )


### பகுதி - II

- **முதலாம் வினாவிற்கும்** ஏனைய நான்கு வினாக்களுக்குமாக எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.
- முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**01.**

i) எண்ம எண் 562 ஐ BCD இலக்கமாக மாற்றிக் காட்டுக

ii) A, B ஆகியவற்றை இனங்காண்க




iii) கீழேயுள்ள அட்டவணையை இலக்க முறைமை தொடர்பான உமது அறிவினை பயன்படுத்தி நிரப்புக.

| **Decimal தசம எண்** | **Binary இருமு எண்** | **Octal எண்ம எண்** | **Hexa Decimal பதினறும எண்** |
|---|---|---|---|
| 47 | ……………… | …………….. | $2F_{16}$ |
| ………….. | $101110_2$ | $56_8$ | …………….. |

iv) பணிச்செயல் முறைமைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவ் ஒவ்வொரு பணிச்செயல் முறைமைகளுக்கும் ஒரு உதாரணம் வீதம் தரப்பட்ட பட்டியலில் இருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

A. Single User
B. Multi User
C. Multi Task
D. Real-Time

**Ms DOS** **Windows Server** **Ms Word**
**Mac OS** **OS of an ATM Machine**

v) நிரல் Aயிற்கு பொருத்தமான விடையினை நிரல் Bயிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

| **A** | | **B** | |
|---|---|---|---|
| a | சாள்ஸ் பாபேஜ் | 1 | துளை அட்டை முறைமை |
| b | அடா அகஸ்டா | 2 | கூட்டல் இயந்திரம் |
| c | பிளேஸி பஸ்கால் | 3 | முதலாவது கணினி செய்நிரலர் |
| d | ஜோசப் ஜக்வாட் | 4 | பகுப்புப் பொறி |

vi) தற்போக்கு பெறுவழி நினைவகம் ( RAM ) – வாசிப்பு மட்டும் நினைவகம் ( ROM ) ஆகியவற்றை அவற்றின் இரண்டு இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்துக.

vii) பயன்பாட்டு மென்பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

viii) ஒரு வணிகரின் விற்பனைப் பொதியில் ரூபா.100 விலையில் மூன்று பொருட்கள் காணப்படுகின்றன. அவை ஒரு புத்தகம் (A), வர்ணக்கலவைப் பெட்டி (B), என்பவற்றுடன் வாடிக்கையாளரால் மூன்றாவது பொருளாக பேனை (C) அல்லது

ஒரு பென்சில் (D) என்பவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்ய முடியும். இந்நிலைமைக்கு பொருத்தமான பூலியன் கோவையைத் தருக.

ix) அளவினை அடிப்படையாகக் கொண்டு கணினியினை வகைப்படுத்துக.

x) பின்வரும் குறுக்கு வழிச்சாவிகளின் தொழிற்பாட்டினைக் குறிப்பிடுக?

a. Ctrl + V        b. Ctrl + B

**02**. பச்சையில்லம் ஒன்றினுள் உள்ள செடிகளுக்கு நீர் பாய்ச்சுவதற்காக தருக்கச் சுற்று ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் செடிகளுக்கு நீர் பாய்ச்சப்படும் நடைமுறைமையானது பின்வருமாறு பின்பற்றப்பட திட்டமிடப்படுகின்றது.

- செடிகள் வாடியுள்ள போது அல்லது
- சூழல் இருட்டாக உள்ள போது அல்லது
- யாதேனுமொரு நேரத்தில் யாராவது செடிகளுக்கு நீர் பாய்ச்ச விரும்பின் கைமுறை ஆழியும் பயன்படுத்தப்படலாம்.

இதற்கான தர்க்கச்சுற்றை வடிவமைக்கும் பணி உம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் கருதுக. தர்க்கச் சுற்றினை நீர் AND, OR, NOT ஆகிய படலைகளை மட்டுமே பயன்படுத்தி வடிவமைத்தல் வேண்டும்.

a. மேற்படி அமைப்பின் செயற்பாட்டை உண்மை அட்டவணை ஒன்றில் குறித்துக் காட்டுக.

b. மேற்படி நடைமுறைக்கான பூலியன் கோவையைத் தருக.

c. AND, OR, NOT ஆகிய வாயில்களை ( படலைகளை ) மட்டுமே பயன்படுத்தி மேற்படி நடைமுறைக்கான தர்க்கச்சுற்றினை வரைந்து காட்டுக.

**03.** திரு.பெரேரா என்பவர் ஒரு மொத்த வியாபாரியாவார். இவர் தனது தொடர்புடைமைத் தரவுத் தளத்திலே பொருட்களுக்கான குறியீடு மற்றும் விலைகள் தொடர்பாகவும், இருப்பு தொடர்பாகவும், வழங்குநர்கள் தொடர்பாகவும் பேணும் அட்டவணைகளின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

ıtem table

| ItemID | Item | Unitprice |
|---|---|---|
| I001 | White sugar | 95 |
| I002 | Brown sugar | 125 |
| I005 | Wheat flour no 1 | 120 |
| I065 | Nadu rice | 67.50 |
| I074 | Wheat flour no 3 | 100 |

stock table

| supNum | ItemID | Currentstock |
|---|---|---|
| s009 | I001 | 75 |
| s456 | I005 | 90 |
| s009 | I002 | 35 |
| s089 | I001 | 70 |
| s001 | I074 | 100 |

Supplier table

| supNum | Surname | Initials | Address |
|---|---|---|---|
| s009 | Perera | W.T. | No.45,Temple lane, Kandy |
| s456 | Silva | A.K.D | Park Lane, Nugegoda |
| s234 | Wijesinghe | S.G. | No.22.Cross Street, Matale |
| s089 | Perera | C.F. | 6/15,University Quarters, Peradeniya |
| s001 | Silva | A.K.D | No.45/A, Temple lane, Kandy |

i. “Item table” இல் காணப்படும் புலங்கள் (Fields), பதிவுகள் ( Records ) என்பவற்றின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக?

ii. பின்வரும் புலங்களுக்குப் பொருத்தமான தரவு வகையைக் குறிப்பிடுக :

a. supNum b. Currentstock

c. Initials d. Unitprice

iii. உரிய அட்டவணைகளையும் அவற்றிற்குப் பொருத்தமான முதன்மைச் சாவி (Primary key) தருக.

iv. முதன்மைச் சாவியொன்றின் விசேட பண்புகளைக் குறிப்பிடுக?

**04**. கீழ்வருவனவற்றில் ஏதாவது நான்கிற்கு மட்டும் சிறுகுறிப்பு எழுதுக.

i. அகிலத்தொடர்பாடல் துறை (USB port)

ii. சமூக வலைத்தளங்கள்

iii. வலையமைப்பின் அனுகூலங்கள்

iv. ஒற்றைமுறை தரவு ஊடு கடத்தல்

v. முதலாம் தலைமுறைக் கணினிகளுக்கும் இரண்டாம் தலைமுறைக் கணினிகளுக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகள்.

vi. திறந்த ஆதார மூல மென்பொருட்களுக்கும் பதிப்புரிமை கொண்ட மென்பொருட்களுக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகள்

**05.** தரப்பட்டுள்ள விரிதாளானது ஐந்து மாணவர்கள் நான்கு பாடங்களில் பெற்ற புள்ளிகளைக் காட்டுகின்றது.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| **1** | **Name** | **Sub 01** | **Sub 02** | **Sub 03** | **Sub 04** |
| **2** | Rashmika | 50 | 70 | 90 | 50 |
| **3** | Anne | 70 | 65 | 50 | 60 |
| **4** | Fathima | 80 | 81 | 70 | 95 |
| **5** | Kumara | 65 | ab | 71 | 80 |
| **6** | Amila | 82 | 52 | 62 | 70 |
| **7** | Minimum Marks | | | | |
| **8** | Maximum Marks | | | | |
| **9** | Average | | | | |
| **10** | Count | | | | |

i. அதிகுறைந்த புள்ளி, அதிகூடிய புள்ளி, சராசரி ஆகியவற்றை கணிப்பதற்காக B7 , B8, B9 ஆகிய கலங்களில் எழுத வேண்டிய சூத்திரங்களைத் தருக.

ii. சூத்திரத்தினை திரும்ப உட்புகுத்தாது கலம் B7 இலிருந்து E7 வரை உரிய பெறுமதிகளைப் பெற நீர் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?

iii. கலம் C10 இல் =COUNT(C2:C6) எனும் சூத்திரம் வழங்கப்படின் பெறப்படும் பெறுமதி (வெளியீடு) யாதாக இருக்கும்?

iv. ஒரு கலத்தில் பின்வரும் சமன்பாடு உள்ளிடப்பட்டால் பெறப்படும் பெறுமதியைக் குறிப்பிடுக?

**= 8/2*3-2^3+5**

**06.** சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி பின்வரும் விளம்பரம் உருவாக்கப்பட்டுள்ளது.




i. Aயினை உட்புகுத்த பயன்படுத்தப்பட்டுள்ள கருவியின் பெயர் யாது?

ii. B யினை விளம்பரத்தினுள் உட்புகுத்துவதற்கான படிமுறையைக் குறிப்பிடுக.

iii. Cயில் பயன்படுத்தப்பட்டுள்ள வடிவமைப்பு யாது?

iv. D குறிப்பது என்ன?

v. மென்நகல் ஒன்றில் பார்க்கும் போது ஒரு வார்த்தை சிவப்பு நிறத்தில் அடிக்கோடிடப்பட்டு காணப்படுகின்றது. இதனை அகற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

**07.** "சூசன்" தனது தொழிற்துறையில் பல்வேறு பிரிவுகளில் கணினிகளைப் பயன்படுத்தி வேலை செய்கின்றார். இவர் வலையமைப்பினைப் பயன்படுத்துவதனூடாக தனது தொழிற்றுறையை மேலும் வளர்க்க விரும்புகிறார். இதற்காக கணினி வலையமைப்பு தொடர்பான தகவல்களை தேடிய வண்ணம் உள்ளார்.

i. இவர் தனது நிறுவன கணினிகளை வலையமைப்பு செய்வதனால் அடைந்து கொள்ளக் கூடிய நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii. இவர் தனது தொழிற்துறையில் விளம்பரத்துக்காக பயன்படுத்தக்கூடிய உபாயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

iii. சூசன் பயன்படுத்த பொருத்தமான இரண்டு வலையமைப்பு இடத்தியல் வகைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் இரு நன்மைகளையும் குறிப்பிடுக.

iv. LAN – WAN என்பவற்றுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிட்டு இரண்டு வலையமைப்பு வகைகளுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.